

விகடகவி மு. திருநாவுக்கரசு

களின் அமரத்துவ நினைவாக மலர்ந்த

# யும் கவிதையும்

JPL
C12116

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவையூர் விகடகவி

கலாபூஷணம்,

புலவர் மு. திருநாவுக்கரசு JPUM

(ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி)

அவர்களின்

19116CC

KOHA JPL

அமரத்துவ நினைவாக மலர்ந்த

255028

# கதையும் கவிதையும்

255028 CC

09.12.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.



KOHA
JPL

அமரர்

# விகடகவி கலாபூஷணம் மு. திருநாவுக்கரசு

அவர்கள்

மலர்வு
01.04.1939

உதிர்வு
09.11.2014

## திதி வெண்பா

ஐப்பசி மாசத்து அருள்சேர் இருபத்து மூன்றில்
ஒப்பரிய அபரபக்க திருதியையில்
இப்புவியில் ஈகை பல புரிந்து
இன்பமுற வாழ்வமைத்த
செப்பரிய குணநலத்தின் குன்றாம்
சீர்மேவு திருநாவுக்கரசனவன்
அப்பன் உறையும் அம்பலத்தே தான்சேர்ந்து
இன்புற வாழ்வான் இனிது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்நாள் நீதிபதி

**நீ**தி தேவதையின் தலைமகனாக திகழ்ந்து இறையடி சேரும்வரை ஓய்வுக்குப்பின்பும் (பதில்) நீதிபதியாக கடமையாற்றி வாழ்நாள் நீதிபதியாக திகழ்ந்தவர். இன்று அமரர் உலகில் வாழும் நீதியாளன் மாண்புமிகு உயர்திரு திருநாவுக்கரசு ஐயா பாதம் பணிந்து,

எல்லோரும் இன்புற்று சிரித்துவாழ மகிழ்வுடன் வாழ்க்கைத் தத்துவம் தந்த நடமாடும் பல் கலைவேந்தன் சுந்தரத் தமிழ்பேசி கேட்போரை பரவசமடையச் செய்ததோடு, திருவள்ளுவர் குறளை நாளும் உச்சரிப்பதோடு குறளுக்கமைய வாழ்வாங்கு வாழ்ந்து, புரட்சிக்கவிஞன் பாரதியின் உணர்வுபூர்வ கவிதைகளை பாடியதோடு, நாளும் வாழ்வை உணர்வுபூர்வமாக வாழ்ந்து பாரதியின் கவிதைக்கு மற்றையவர் வாழ்வையும் அர்த்தமுற வாழவழிகாட்டிய புலவர் சகலகலாவல்லவனாக எல்லோருக்கும் வாழும்வழி சொன்னவர் இன்று தெய்வ உலகில் இருந்து எம்மையாற்றுப்படுத்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத்தமிழ் பாரம்பரியம் நிறைந்த அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் மட்டுவில் பண்டித்தலைச்சி அம்பாள் அருளால் முத்தையா செல்லாச்சி தம்பதிகள் பெற்றெடுத்த நாம் கண்ட "நாவுக்கரசன்" திருநாவுக்கரசு - அக்காவிற்கு அருமைத்தம்பியாகவும் தம்பியர் இருவருக்கும் மூத்தவழி காட்டும் அண்ணன் ஆகவும் குடும்பப்பெயர் துலங்க ஊருக்குப் பெருமை சேர்க்க, தமிழுக்கு அழகுசெய்ய, எல்லோரும் மகிழ்ந்து இன்புற்றிருக்க வந்துதித்தார்.

சரஸ்வதி கடாட்சம், இலட்சுமிகடாட்சம் நிறைந்த குடும்பத்தில் உதித்தவர் கும்பிழாவளை பிள்ளையாரின் பித்தனாக, மீளாஅடியவராக, பிள்ளையாருடன் நாளும் உரையாடும் பக்குவமும் பெற்றவர். முத்தையன்கட்டு மூலகர்த்தாவாக பொறியியலாளராக பணிபுரிந்த முத்தையா செல்லாச்சி தம்பதிகள் கல்விப் பாரம்பரியம் நிறைந்த பண்டிதர்கள், மாமனார், சிறியதந்தையார்கள் நிறைந்த கூட்டுக்குடும்பத்தின் வழிகாட்டலின் சான்றோனாக வளர்ந்தார்.


இளமையிலே தமிழை ஐயம் திரிபுறக்கற்றுணர்ந்ததோடு ஆரம்பக் கல்வியை அளவெட்டி சதானந்தாவிலும், அளவெட்டி அருணோதயா விலும் கற்றுத்தேறி, இடை நிலைக் கல்வியை புகழ்பூத்த யாழ்ப்பாணக்கல்லூரியில் கற்று இருமொழி வித்தகராக, கல்லூரி விழாக்களில் பெரும் சாதனையாளராக கல்லூரிக்கும், தனக்கும் பெருமை சேர்த்து உயர்கல்விக்காக சட்டக்கல்லூரியை நாடிய பொழுது, தந்தையார் சட்டக்கல்வியை கற்க அளவெட்டி அருட்கவி விநாசித்தம்பி ஐயாவின் அம்பாள் அருள்வாக்கும் பெற்று அனுமதி வழங்கி மகிழ்ந்தார்.



சட்டக்கல்லூரியில் சட்ட நுணுக்கங்களை நுணுகிக்கற்றதோடு, தமிழ் மன்றத்தை அலங்கரித்ததோடு, நாவன்மையால் நாவுக்கினிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாற்றி, திருநாவுக்கரசு பல தங்கப்பதக்கங்கள் பெற்று தமிழுக்கும் தனக்கும் பெருமை சேர்த்தார். சட்டக்கல்லூரி மாணவனாக வாழும் காலத்தில் ஈழத்து காந்தி, தமிழ்த் தலைவன், ராணி அப்புக்காத்து, பெரிய மனிதன் என்ற பெருமைக்குரிய தந்தை செல்வாவுடன் தந்தை - மகன் உறவில் வளர்ந்ததோடு, தந்தை செல்வாவிடம் தமிழ் உணர்வையும், சட்ட நுணுக்கங்களையும் அரசியல் சாணக்கியத்தையும், சிறந்த பண்புகளையும் பெற்று தந்தை செல்வாவின் ஆசியோடு நல்லதொரு இளம் சட்டத்தரணியாக உதயமானார்.



1970களில் யாழ்ப்பாணம், மல்லாகம் மாவட்ட நீதிமன்றங்களில் பெரிய சட்ட மேதைகள், சட்ட ஜாம்பவான்களோடு அவர்களுக்கு நிகராக வாதம் செய்ததோடு தர்ம வழியில் தமது கடமையை, கடவுள் பணியாக மேற்கொண்டு பெருமை பெற்றார். அக்காலத்து நீதிபதிகளின் ஆசியையும், மதிப்பையும் பெற்றார். 1980களில் மல்லாகத்தில் பெருமைக்குரிய நீதிபதியாக கடமையாற்றிய மாண்புமிகு நீதியரசர் இன்றைய தமிழ் முதல் முதலமைச்சர் திரு. C.V. விக்கினேஸ்வரன் ஐயா! அவர்களின் நம்பிக்கைக்கும், விசுவாசத்திற்கும் உரிய சட்ட வல்லுனராக பணிபுரிந்தார்.

அன்றைய தமிழர் விடுதலைக்கூட்டணியாக இருந்து இன்றைய கூட்டமைப்பு கூட்டங்களில் மிகவும் சுவைபட நிறைவுப்பேச்சாளராக அதிகாலை ஒரு மணிவரை உரையாற்றி தமிழர் கூட்டணியை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக பலம்பெறவும், அண்ணல் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித்தலைவராகவும் வருவதற்கு வாக்குப்பலத்தை நிறைவாகப்பெற தீர்க்கதரிசனமான அர்த்தமுள்ள உரையாற்றி உதவியதை எல்லோரும் போற்றி ஆனந்தம் அடைந்தனர்.

பெருஞ்சிறப்போடு வாழ்ந்த வேலணை தனவந்தர் திருநாவுக்கரசு தர்மலட்சுமி தம்பதிகள் வேலணை சிற்பனை முருகமூர்த்தி அருளால் பெற்றெடுத்த மங்கை நல்லாள் மங்கையற்கரசி (இசை ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை மணமுடித்து, குடும்பம் ஒரு கோவில், குடும்பம் ஒரு கதம்பம், நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்ற வாக்கை மெய்ப்பித்து அப்பா, அம்மா என்ற இனிய உச்சரிப்பு நிறைவாக நாளும் கேட்ட வீடு இறையாசியுடன் மூன்று புதல்வர்கள்: வைத்திய கலாநிதி குமணன், பொறியியலாளர் கோகுலன், வைத்திய கலாநிதி ரமணன் மூவரையும் பெற்றெடுத்து கல்வியை கரைகண்டதோடு, டொக்டர் குமணன் உதவியால் "உயிரோடு வாழுகின்றோம்" என்று பலர் சொல்லக்கேட்டு மனம் மகிழ்வோடு இருந்தார். பொறியியலாளன் கோகுலனது சாதனைகளையும், வைத்திய கலாநிதி ரமணன் ஒரு ஞானி என்றும் சொல்லிப்பெருமைப்படுவார். மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் பெருமையால் உளம் திருப்தி கண்டவர்.

சட்டத்தரணியாக பெருமை பெற்றவர் அவரது திறமையால் நிதிபதியாக பதவியுயர்வு பெற்று நீதிக்கு தலைவணங்கி, கடமையாற்றியதோடு, குற்றவாளி கூட தனக்கு வழங்கிய தண்டனையை மனப்பூர்வமாக, உணர்வு பூர்வமாக ஏற்கக்கூடிய முறையில் நீதி வழங்கியவர். நிதிமன்ற உத்தியோகத்தர்கள், அங்கத்தவர்கள் நீதிக்காக உழைக்க வழிகாட்டியவர். இனம், மொழி, மதம் கடந்து யாதும் ஊரே யாவரும் கேளீர் என வாழ்ந்தவர்.



நீதிபதிகள் சமூகத்தோடு உறவாடாது தனிமைப் படுத்தியிருந்தவேளை சமூ கத்தினை சீராக்க, "சமூக மயமாக்கல்" மிகமிகமுக்கியம் என்பதால் நீதிபதியாக கடமையாற்றியதோடு, சமூக நிகழ்வுகள் யாவற்றிலும் தோன்றி பல நல்ல விடயங்களை சமூகத்திற்கு ஊட்டி, உணர்த்தி சமூகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து குற்றவாளிகளாக நீதிமன்றம் வரும் நிலையை குறைத்தவர். வரும்முன் காப்போனாக சமூக நிகழ்வுகள் பலவற்றிலும் மிகப்பக்குவமான உரையாளனாக, பட்டிமன்ற நடுவராக, விவாத அரங்குகளின் தலைவராக, கவியரசராக பணி புரிந்தார்.

இயற்கை இரசிகனாக, புலவனாக, இலக்கியவாதியாக இருந்தமையால் சமூகத்தைச் சீராக்கவேண்டிய பணியில் சமூகத்தை பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடியாக தனது எழுது கருவியால் சமூகத்தில் நாளும் காணும் சிறப்புக்கள், சீர்கேடுகள் யாவற்றையும் உடனுக்குடன் 'விகடகவி' என்ற தலைப்பில் மிகப் பல்வியமாக கவிமூலம் நாளாந்தம் உதயன் பத்திரிக்கையில் எழுதி, சமூகத்தை விழிப்படையச் செய்தார். விகடகவி நூலுருவம் பெற்று பலர் நாளும் படிக்கும் நல்லதொரு நகைச்சுவை நூலாகியது. இலக்கியப்பணிகளோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவையில் அங்கத்துவம் வகித்து பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு நிர்வாகச் சட்ட ஒழுங்குகளுக்கான ஆலோசனையை வழங்கியதோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மக்கள் மயப்பட்டு பல சமூக கல்விப்பணிகளை ஆற்றுவதற்கு உறுதுணையாக இருந்தார்.

ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் கண்டவர் முதியவர், இளையவர் - கற்றோர், மற்றோர், செல்வந்தர், ஏழை - பெரியவர், சிறியவர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்றவேறுபாடு காணாது யாபேரோடும் சகசமாக, மகிழ்வாக, அவரவர் நிலைக்கேற்ப அருமையாக உரையாடி மகிழ்வித்தவர். காலம் தவறாது கடமை செய்யும் காலன் அவரை அழைத்துவிட்டான். இவ்வுலகில் எம்மைப் பெருமைப்படுத்தி மகிழ்வித்த பெருமகனார் தெய்வ உலகிலிருந்து என்றும் எம்மை வழிநடத்துவார்; ஆசீர்வதிப்பார் என்ற நம்பிக்கையுடன் வாழ்கிறோம்.

**இல. 246/4A,**
**கோயில் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**அவரால் பெருமை பெற்ற**
**அன்பு ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி**
முன்னாள் அதிபர்
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, ஓய்வுநிலை
பிரதிக்கல்விப்பணிப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைக்கும் போதெல்லாம் நெஞ்சம் நெருடும்

ஓய்வுபெற்ற நீதிபதி விகடகவி உயர்திரு மு. திருநாவுக்கரசு அவர்கள் எம்மோடு இல்லை என்ற நினைப்பு இதயத்தை பிழிகிறது. அவரின் இழப்பை நம்பமுடியவில்லை. விகடகவிக்கும் மரணமா? எதுவுமே புரியாத அங்கலாய்ப்பு என் கன்னத்தின் ஓரங்களை நனைத்துக் கொள்கிறது.

அமரர் மு. திருநாவுக்கரசு ஓய்வுபெற்ற நீதிபதி, வழக்கறிஞர், பெரும்புலவர் என்ற எல்லையை கடந்து மானிடத்தை நேசித்த ஒரு பண்பாளனாக உடுக்கை இழந்தவன் கைபோல் இடுக்கண் களைகின்ற நட்புக்குரியவராக ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடின்றி எல்லோருடனும் அன்பாகப் பழகும் இனிய மனிதராக வாழ்ந்தார்.

இத்துணை சிறப்புக்களும் திருநாவுக்கரசு என்ற மனிதரிடம் குடிகொள்வதற்குக் காரணம் சைவப் பண்பாட்டுவிழுமியம் மிக்க குடும்பத்தில் அவர் பிறந்து வளர்ந்ததே எனலாம்.

அளவெட்டி ஊரில் ஸ்ரீமான் முத்தையா அவர்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் புகழ்பூத்த பொறியியலாளராக கடமை யாற்றியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் சேவைச்சிறப்பால் அவரின் நாமத்தைச்சூட்டி வன்னிப் பிராந்தியத்தில் முத்தையன்கட்டு என்ற இடம் அமையப்பெற்றது.


இத்துணை சிறப்புமிக்க பொறியியலாளர் முத்தையாவிற்கும் அவரது வாழ்க்கைத்துணை செல்லாச்சி அம்மையாருக்கும் மூத்த தவப்புதல்வனாகப் பிறந்த திருநாவுக்கரசு அவர்கள் கருவிலே திருவுடையவர்.

விருந்தோம்பல் பண்பில் சிறப்புற்று விளங்கிய முத்தையா அவர்களின் வீட்டிற்குச் சென்ற சிவனடியார் ஒருவர் போசனத்தின் பின்னர் முத்தையாவைப் பார்த்து பிறக்கப்போகும் உன் மகனுக்கு திருநாவுக்கரசு எனப் பெயர்சூட்டுக என்று கூறிச்செல்ல அந்த நாமத்தையே தன் மகனக்குச் சூட்டி மகிழ்ந்தனர் முத்தையா தம்பதியினர்.

கல்வி கேள்விகளில் சிறப்புற்கு விளங்கிய திருநாவுக்கரசு அவர்கள் மேடைப்பேச்சுக்களில் தனக்கு ஈடு இணையிலாப் பேச்சாளராக விளங்கினார்.

தந்தை செல்வநாயகத்தின் செல்லப்பிள்ளையாக, தந்தை செல்வாவின் மகன் சந்திரகாசனுடன் சட்டக்கல்லூரியில் ஒன்றாகக் கல்வி பயின்றதுடன் தந்தை செல்வாவின் வழிப்படுத்தலில் அவரது கொள்கையை தனக்குமுரியதாக வகுத்துக்கொண்டார்.

1970, 1977ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கான தமிழரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டங்களில் திருநாவுக்கரசு அவர்களின் நகைச்சவை மிகுந்த பேச்சாற்றலும் கதைகூறும் தனித்துவப் பாங்கும் அவர் முழங்கிய பேச்சும் மக்களை சிரிக்க வைத்து சிந்தனையைத்தூண்டி அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தி தமிழரசுக் கட்சியின் பாரிய வெற்றிக்கு வழிவகுத்துக் கொடுத்தார்.




நேர்மையும் நெஞ்சுரமும், வஞ்சமிலாப் பெருமனமும்
செந்தமிழில் சொல்வளமும், ஆற்றுநடை ஆங்கிலமும்
கைவந்த கவிதையுடன் வலம் வந்த நகைச்சுவையும்
சட்ட அறிவோடு சமுகச் சிந்தனையும்
நீதிவானாக நிமிர்ந்த நேர்வாழ்வும்
வயோதிபத்தின் வாசலிலும் வனப்பான வசீகரமும்....
அத்தனையும் ஓர் கவிதை! அழகான தமிழ்க் கவிதை !!
நாவுக்கு அரசனாய்! நம் மண்ணின் "திரு" மகனே!!
நனையும் விழிகளுடன் நமது அஞ்சலிகள்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பள்ளியில் படிக்கும் காலத்தில் பேச்சுகள், கவிதைகள் என்பவற்றை எழுதித் தந்து என்னை மேடையேற்றிய பெருமை அவரையே சாரும். சட்டத்துறையைக் கற்குமாறு அவர் என்னைப் பலமுறை வற்புறுத்தியபோதிலும் என் தொழில்துறை அதற்கு துணைபோகவில்லை.



1970ஆம் ஆண்டு முதல் இற்றைவரை அன்னார் பங்காற்றிய அரசியல் மேடைப்பேச்சுகள், சமய சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள், கவியரங்குகள், விவாதமேடைகள் இன்னோரன்ன நிகழ்ச்சிகளில் தவறாது கலந்து கொண்டு பார்த்து ரசிக்கும் பார்வையாளனாக இருந்து வந்த பாக்கியத்தைப் பெற்றேன்.

இறுதியாக நான் 01.10.2014 இல் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற வாணிவிழாவில் பட்டிமன்ற நிகழ்வில் அன்னாரின் தலைமையுரையைக் கேட்டு ரசிக்கும் பாக்கியத்தைப் பெற்றிருந்தேன்.

என்னுடன் நெருங்கிப் பழகிய நண்பனாக, நல்லாசானாக பண்பிலே தெய்வமாக இருந்த அன்னார் அவர்களின் இழப்பை நினைக்கும்போதும் அவர் சிகிச்சைக்காக கொழும்பு செல்வதற்கு முன் என்னுடன் உரையாடியதை நினைக்கும்போதும் என் இதயம் கனத்துக்கொள்ளும்.

மங்கலம் மிக்க மனைமாட்சி மற்றும் நன்கலம் மிக்க மக்கட்பேறு என்ற பெரும் செல்வத்தை தனதாக்கி தக்கார் தகவிலார் என்பதை நிலைநாட்டிய ஓய்வு பெற்ற நீதிபதி மு. திருநாவுக்கரசு அவர்களின் நினைப்போடும் ஓர் அற்புதமான மனிதப்பிறவியுடன் நாற்பத்து நான்கு ஆண்டுகள் சேர்ந்திருக்கப்பெற்ற பயன் மிக உன்னதமானது என்ற பெருமையுடனும் அவரின் புனித ஆத்மா அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையாரின் திருவடிகளில் நித்திய பேரின்பம் அடையப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

என்றும் அன்னாரின் நினைவுகளுடன்...
**அளவையூர்**
**சைவப்புலவர், பண்டிதர் வைத்தியலிங்கம் பாலகிருஷ்ணன்**
B.A(Cey) B.A(Hons Cey), M.A (Cey) Dip.in.Human Resource



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பநிலை நயப்பு:

## அன்பர் பணி செய்ய
## ஆளாக்கிய சட்டமும்,
## இன்ப நிலை எய்த
## இலக்கிய தமிழும்
## விளங்கிய
## அமரர் முத்தையா
## திருநாவுக்கரசு
## அவர்கள்

**(ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி, சிரேஷ்ட சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிஸ், கவிஞர் – விகடகவி)**



ஆம்;


அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையாரின் வரத்தால் பிறந்ததனாலும், அப்பர் சுவாமிகளின் தேவாரங்களும், அவரது வரலாறும் உள்ளத்தில் பதிந்துவிட்ட காரணத்தாலும் இவருக்கு, இவருடைய பெற்றோரான அளவெட்டியைச்சேர்ந்த அமரர்களான, பரமு முத்தையா - செல்லாச்சி தம்பதிகள் 'திருநாவுக்கரசு' எனப்பெயர் சூட்டி, மகிழ்ந்தனர்.

*01.04.1939* என்ற முதன்மையும், அதிஷ்டமும் நிறைந்த சூரிய எண்ணில் பிறந்தமையால், அவரது வளர்ச்சி நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனி யுமாக அமைந்தது.

ஏழுவயதுவரை இவருக்கு இருந்த மொழி ஆற்றுகைக் குறைபாட்டிற்காக செல்லாச்சியம்மையார், கும்பழாவளையானை எண்ணிக் கடுந்தவமாக விரதமிருந்தார். மாருதப்புரவீகவல்லிக்கு முழுமையான மனித முகத்தைக் கொடுத்து கும்பழாவளைப் பிள்ளையார், இவரின் விரதவேண்டுதலுக்கு வரமீந்தவராய், தீர்த்தமோடு தமிழையும் சேர்த்து நாவுக்கரசனின் வாய்க்குள் மந்திரித்து பருக்கிவிட அதிசயமும், அற்புதமும் ஏற்பட்டது. ஆன்மீகமும், அருந்தமிழும் ஆறாக ஓடிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முத்தையன் கட்டுக்குளத்தை நிர்மாணித்த இவரது தந்தையாரைக் கௌரவித்ததனாலேயே அதற்குஇவரது தந்தையின் பெயர் சூட்டப்பட்டது என்பது வரலாறு. அதுபோன்றே இவரது பெயரின் தாற்பரியம் இவரை ஒரு சிறந்த பேச்சாளனாக, சட்டத்தரணி யாக, நீதிபதியாக, கவிஞராக அதுவும் விகடகவியாக, சிறந்தவொரு ஆன்மீகவாதியாக, அரசியல் ஞானியாக, எல்லாவற்றிலும் மேலாக சாதாரண ஒரு தோழனாக இல்லையில்லை ஒரு இளைஞனாகத் தோற்றுவித்ததெனலாம்.

சட்டத்துறையில் இவரைத் தெய்வமே வழிநடத்திற்றெனலாம். பிழையான தீர்ப்பினை, ஒருபோதும் எச்சந்தர்ப்பத்திலும் வழங்கியதில்லை. அதேவேளை மெய்யான தொன் றைப் பொய்யாக்கியதில்லை. பொய் யானதொன்றை மெய்யாக்கியதும் இல்லை. அதேபோல கொலை செய்தவர்களையும், வன்புணர்வில் ஈடுபட்டவர்களையும் தண்டிக்காமல் விட்டதுமில்லை. சிலவேளைகளில் வழக்குகளில் தர்மசங்கடம் ஏற்படும் போது கும்பழாவளைப்பிள்ளையாரின் திருவருள் முன்னிற்கும். தீர்ப்பு இலகுவாகிவிடும். விவாகரத்து வழக்குகளில் பெரும்பாலும் கணவன் மனைவி ஒற்றுமையாகி மீண்டும் புதுவாழ்வு பெற்ற பலகுடும்பங்கள் இன்றும் இவரை வணங்குகின்றார்கள். வாழ்த்துகின்றார்கள். இது ஒரு தருமகாரியம் அல்லவா! சட்டத்திலும் தரும காரியம் செய்யலாம் என்பதை நிரூபித்துக்காட்டிய ஒப்புரவாளர். அதனாலோ என்னவோ 'காலன்' பலதடவை இவரிடம் வந்து திரும்பிப்போனதாகவே இவருடைய ஜாதகம் இருந்திருக்கும். வேறு வழியின்றி, கொழும்பு வைத்தியசாலையில் மௌனித்திருந்தவேளை காலனுக்கு வசதியாகிப் போய்விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



09.11.2014 அன்று முகவரி இங்கிருக்க, பேரானந்தப் பெருவாழ்வுக்காய் நாவுக்கு அரசர் அழைக்கப் பட்டார்.

இவர்தொட்டதெல்லாம் பேறாகும் என்பதற்கிணங்க ஆன்மீகப் பேச்சினால் அவலங்கள் குறைந்தன. கலாச்சாரப் பிறழ்வுகளுக்கு ஏற்ற பரிகாரத்தை முன்வைத்தார். பெற்றோர் பிள்ளைகளுக்குள் ஏற்படும் முரண்பாடுகளைக் களைந்தார். தொலைக்காட்சி நிகழ்வுகளில் மேம்பாடு தொடர்பான தரவுகளுக்கு வரவு வைத்தார். ஆலய விவகாரங்களில் பேசப்படும் பலம், பலவீனம் தொடர்பாக ஆரோக்கிய மாக உணரவைத்தார். சமூகத்தின் அடித்தள மக்களின் நாடியைப் பிடித்து, அதற்கேற்ற வகையில் தன்னை இலகுவாக எளிதாக்கி வைத்திருந்தார். யாரும், எவரும் பயமின்றி தன்னையணுகும் வண்ணம் இவரது இதயக்கதவு திறந்தே இருந்தது.

ஆம்! தமிழன்னை இவரைத் தன்மடியில் வைத்து பாலூட்டி னாளோ! தமிழ் ஆறாகப் பெருகிற்று. பட்டிமன்றம், பேச்சு. பிரசங்கம், அரசியல் என இவரால் அனைத்துமே உயிர் பெற்றது. சமூகத்தின் விடிவுக்காக கவிதையை ஓர் ஊடகமாக்கி, விகடகவி எனப்புகழ்பெற்றார். துணைவியார், பிள்ளைகளின் கல்விச் சிறப்பும், அளவையூரின் மண்வாசனையும், நல்லூரானின் திருவருட்பேறும் 12.11.2014இல் நடைபெற்ற வழியனுப்பி வைத்த பாங்கும் சுவர்க்கவாசலின் கதவுகளைத் திறக்கச் செய்தன. அந்தவேளை ஓம் என்ற நாதம் ஒலித்தது.

"ஓம் சாந்தி சாந்தி என்றது வேதம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘அளவைக்கு வாய்த்த பேரரசு”

கும்பழாவளையானைக்
கூப்பிய பேறதனால்
கிடைத்ததோ இப்பேரரசு;
கோடான கோடி சுகம் இருந்தாலும்
குலம் காக்க வந்த தனி அரசு;
நம்பல(ா)ம் நம் தமிழுக்கு
நாளும் ஓர் அணிகலனாய்
நனிசிறந்த தமிழ் அரசு;
நவிலும் நீதிக்கு என்றும்
நாடே தலை வணங்கிய
நாவலர் திருநாவுக்கரசு.



பேச்சிலே உயிர் இருக்கும், பேனாவில் உணர்விருக்கும்,
மூச்சிலே தமிழ் இருக்கும், முடிவில் விகடகவி இருக்கும்,
சேர்ச்சிலைப்போல இவர் சொற்பொழிவில் சுகம் இருக்கும்,
சென்ற இடம் எதுவானாலும் சொந்த முகவரி இங்கிருக்கும்.

அளவையூர் கே.எஸ். சிவஞானராஜா,
கொக்குவில்
2014.11.12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

255128

சட்டவாட்சி தரணியில் நிலைக்கச்
சட்டத்தரணி ஆனீர்
வழக்குரை மன்றில் நீதிபதியுமானீர்,
சமூக மன்றில் திருநாவுக்கரசராய்
விகட கவியாய் நாமம் புனைந்து,
கவிதை கட்டுரை பேச்சுப் பொதுப்பணி
எனப்பல வழிகளில் நின்று உழைத்து
சமூகநீதி அரசியல் நெறிமுறை
சமத்துவம் சுதந்திரம் எனப் போராடி
சனங்களுக்கோர் சரணாலயம் அமைத்தீர்,
பல்பயன்படுமாறு நின்று நீர் உழைத்தீர்;
இந்தவாறு உழைத்தலே இயற்கையின் வழிமுறை
இவ்வழி நின்றீர் இனிப்போதும் என்றீர்
கண்ணிமைக்கு முன்னர் இமைமூடி விட்டீர்!
உமை வணங்குவதன்றி வாழ்த்த நாம் அறியோம்.

வங்கக் கவி ரவீந்திரநாத் தாகூர் படைத்த
"கீதாஞ்சலி" யின் வரிகள் சிலதை
அஞ்சலியாக அவிப்பாகமாக
ஏற்றருள் புரிவீர்:

"எனது பிரிவு வேளையில், நண்பர்களே!
எனக்கு நற்பேறு கிட்ட வாழ்த்துங்கள்
விடியல் வீசப்பட்டதாக வானம் கிடக்கிறது,
எனது பாதை அழகாக இருக்கிறது.
வெறுங்கையோடும் எதிர்பார்க்கும் மனதோடும்
எனது பயணத்தைத் தொடர்கிறேன் நான்.
எனது பயணம் முடிவுறும் வேளையில்
அந்தி வானில் தாரகை வெளிவரும்;
மருள் மாலை ஒளியினது பண்திறத்தின்
துயரார்ந்த சுரங்கள்
மன்னனது நுழைவாயிலில் இசைக்கப்படும்."

**குழந்தை ம. சண்முகலிங்கம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புன்னகையால் எம்மையெல்லாம்
பூரிக்க வைத்தவனே!
நெஞ்சைத் திறந்து நினை வுகளைக் கீழிறக்கி
வஞ்சமில்லாப் புன்சிரிப்பை வாரிவழங்கியவன்
பேச்சாற்றல் உந்தன் உடன்பிறப்பு
ஆச்சரியமாக அடிக்கடி நீ 'பகிடி' சொல்வாய்
உன் நகைச் சுவையைக் கேட்டு
நயந்துமிக மகிழ்ந்தவன்நான்,
போய் வருக ஐயா! எம் தமிழ்ப்புலமைப்
பெருங்கடலே போய் வருக!
நீ இருந்த நாற்காலி, நிச்சயமாய்க்
காலியாய்த்தான் இருக்கும்.
மீண்டுமுந்தன் வர வுக்காய்
பாவாடை விரித்துப் பூவாடை வீசி நிற்போம்.

**அன்புடன்**
**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**
**11.11.2014**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1. அளவைக்குரியவனல்ல நீ அகிலத்திற்குரியவனென்று
பழகும் தமிழில் கவிகள் பல படைத்து உயர்ந்து நின்றாய்.
இழிநிலை கண்டுவிட்டால் இடித்துரைத்து தமிழர்க்கு
வழி காட்டி நின்ற நின் வரிகளை என்ன சொல்வேன்.

2. சில நாட்கள் பழகிய என் சிந்தையினை வாட்டும் துயர்
உள நாளும் உடனிருந்த உத்தமிக்கும் உன் ஒப்பரிய
பிள்ளைகட்கும் பேரர்க்கும் பிரியமான மருமகட்கும்
சொல்லிட வார்த்தையின்றி துடிக்கின்றேன் சொற்கள் தேடி.

# "தமிழுக்காய் தலைசாய்ந்த எம் தகைமைமிகு நீதிபதி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பதவியோ நீதிபதி பட்டமோ சட்டத்தரணி
தமிழுக்காய் தலைசாய்த்து அவர் தகமை ஏதும் பார்க்காது
தலைமையாய் அவரை ஏற்று உன் பக்கம் நீதிகோரி
பட்டிமன்ற கலைஞனாய் நின்றதைக்காண நெஞ்சம் கனத்ததையா.

4. என்பள்ளி தொடக்கம் என்மேடைகள் பலவற்றில்
உன்னை மதித்து அங்கு மேளதாளத்தோடு அழைத்து
உவக்கக் கதையோடு கட்டுரையும் எழுதவைத்த
அந்தக் கணங்கள் என்னை ஆதங்கப்படுத்துதையா.

5. பெண் மகவுகள் எனக்கோ இல்லை பெருவிழா வும் எடுத்ததில்லை
என்தமிழ் மகளுக்கின்று பூப்புனித நீராட்டுவிழா
என் இனிய நண்பர்களே இனிதாக நீரும் வந்து
முன் வாழ்த்துவீர் என எடுத்த கவிதை வெளியீட்டை எப்படி மறப்பேன்?

6. வகிடு எடுத்த மாதர் முகடு வரைக்கும் ஏறி
மகுடம் சூட்டுகின்ற மாண்பினைப் பார்த்தது போல்
அகடவிகடமாகக் கவிதையாலே நின்போலிங்கு
தகடு கொடுக்க வல்லோரின்றி தவிக்குது தமிழுலகம்.

7. அரசியல் மட்டுமல்ல ஆன்மீக மேடைகளிலும்
தரணியில் தமிழுக்காய் தகை சார்ந்த அறிவுரைகள்
சிலேடை பொதிந்து நாடு, சமூகம் சிந்திக்கும் வண்ணம்
பாடல்கள் பலபுனைந்த பாவலனே அமைதி கொள்வாய்.

ஓம் சாந்தி! ஓ சாந்தி! ஓ சாந்தி!

**என்றும் உன் தமிழுக்காய்**
**நினைவேந்தும்**
**கவிமணி அன்னைதாஸன்**

**க. ஆனந்தராசா,**
**ஓய்வுநிலை அதிபர்,**
**ஸ்ரீரங்கம்,**
**ஊரெழு.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Date No

பேரனின் உள்ளத்திலிருந்து......

உலகத்தின் நீதிமன்னனாய் விளங்கி
நாவுக்கு இனிய விகடவெண்பா உருவாக்கி
மக்களை இன்ப மாந்தர்களாக்கி
சிரிப்பால் பல்லாண்டு வாழச்செய்தீர்கள்.
உன் அடியவனாகிய பேரன் உள்ளத்தை
இன்பமாக்கி நல்லறிவு புகட்டிய
உங்களை என்றும் மறவேன்.
வல்ல இறைவன் உன்னை விகடமன்னனாய்
என்றும் வைத்திருப்பான்.
என் அப்பப்பாவை சொர்க்கத்தில்
பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்தும்

அன்புப் பேரன்
கு. பூஜிதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடற்பயிற்சி நிலைத்துக்குப் போய் காலை மாலை வேடிக்கை பார்த்து வந்தால் உடல் வலுவடைந்து விடுமா? அது போல் ஆலயம் உள்ள பயிற்சி நிலையம் இங்கும் வெறுமனே போய் வந்தால் பலன் ஏது? அங்கே முறைப்படி போக வேண்டும் முறையானதையே செய்ய வேண்டும். சந்நிதியில் எல்லாம் நீயே என்ற சரணாகதி நிலையை எய்த வேண்டும். 'எல்லாம் நீயே' என்று அவன் பாதக் கமலத்தில் விழ வேண்டும். அப்படியானால் நிச்சயம் அருட்பார்வை உனக்கும் கிட்டும்.

அழுக்குத்துணியை சலவையில் போட்டுத் தூய்மையாய் எடுக்கிறாயே அதுபோல் உன் மனதையும் அவனிடம் கொடுத்தால் நிச்சயம் அவன் சலவை செய்து தருவான். ஒவ்வொர் துறைக்கும் ஒவ்வொர் டாக்டர் இருப்பது போல் நாட வேண்டியவரையே நீ நாட வேண்டும். காரியம் கை கூடக் கணபதி, கல்விக்குச் சரஸ்வதி, செல்வத்துக்கு லட்சுமி, சக்திக்கு ராஜராஜேஸ்வரி இப்படி வகுத்து தந்துள்ளது நமது சமயம்.

- சுவாமி சின்மயானந்தர்

# கோயிலுக்குப் போய்விட்டால் பலன் கிடைத்துவிடுமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையினர் ஓய்வின்றி உழைக்கின்றனரே. இவர்களுக்கு சோலிகளும் அதிகம், ஓய்வு எடுத்துக் கொள்ளும் (60) வயதுக்கு மேல் ஆண்டவனை எண்ணுவது தவறாகுமா?

மனம் என்ற ஒன்றையும் பகுத்தறிவு என்பதையும் ஏன்? எதற்கு? எப்படி? என்று எண்ணும் ஆற்றலும் மனிதனுக்குரிய அதிக விசேட அம்சங்கள் அதனால் தான் இதையே நீ கேட்டாய்.

ஒரு நாள் ஒரு பொழுதில் மனப்பயிற்சி வந்து விடுவதில்லை. சாட்டையால் குதிரையை அடிப்பதுபோல் நீ அதை அடித்து, நெறிப்படுத்த வேண்டும். அதன் பாட்டுக்கு அதை விட்டு விடாதே. உன் உடம்பில் சக்தி குறைய பார்வை மழுங்கும். காதின் கூர்மை குன்றும். மூளையின் ஞாபகசக்தி தேய்ந்து விடும். அனைத்துமே உன்னைக்கேளாது ஓய்வெடுக்க அப்பிளிக்கேசன் கொடுத்து விடும் ஆகையால் இளமையை தவற விடாதே. மனதை பயிற்சி கொடுத்து நெறிப்படுத்து. மனதை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவா. ஆசை, மோகம், வேட்கை இவற்றில் அலைய விடாதே இப்படிப் பயிற் சியினை சிறுவயதிலே மனதக்கு பழக்குவாயானால் உன் முதிர்ச் சியிலே அம்மனத்தால் நீ பெறும் நிம்மதி பேரானந்த பெருவாழ்விற்கு வித்திடும்.

- சுவாமி சின்மயானந்தர்

தியானம் பற்றிக் கூறினீர்கள் கதவைமூடி, கண்களையும் மூடி தனிமையில் இருந்தும் மனது குரங்காகவே அங்கலாய்க்கின்றதே இம் மனதை பழக்க சுவாமிகள் ஒரு வழி காட்ட வேண்டும்.

# இன்பத் தமிழ்

தமிழுக்கும் அமுதென்று பேர்! - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!
தமிழுக்கு மதுவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்.


தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! - இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்! - இன்பத்
தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ!

**- பாரதிதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைதான். நீ பூசை அறையைப் பூட்டினாய், கண்களையும் மூடி விட்டாய். அடுத்து என்ன? அமெரிக்காவிலே உன் மகனை அந்த மனம் அடுத்த கணம் நாடுகிறது. ஆயிரம் மைல்களை தாண்டி வந்து ஆபிசில் பதவி உயர்வுக்கு பைலைத் தேடுகிறது. பற்று, பாசம், மோகம் இவை மூலம் தான் மனது சஞ்சலமடைகிறது. உன் கையில் சுடு சுடு காப்பியைத் தந்தால் என்ன செய்வாய்? மெதுவாக அதனை ஓரிடத்தில் வைத்து விடுவாய். அதேபோல் உன்மனதில் அலைபாயும் ஆசைகளைச் சிறிது சிறிதாகத் தள்ளி வைத்துவிடு, மனதை உறுத்தும் ஆசா பாசங்களைச் சிறிது சிறிதாக தள்ளி வைத்துவிடு, மனதை கனதியாக வைத்திராதே. பாரச்சுமைகளை அதில் படிய விடாதே, உன் வீட்டுக் குழந்தை எதையோ வைத்து அடம் பிடிக்கிறது நீயும் அதனோடு அடம்பிடிப்பாயா? மெதுவாக அதன் வழிக்குச் சென்று அதன் மனதை மாற்றி நீ வெற்றி கொள்வாயா, அதேபோல் மெதுவாக உன் மனத்தோடு போய் தட்டிக் கொடுத்து இலோசாக அதனை உன் வழிக்குக் கொண்டு வந்து விடு. நீ ஆபிசால் வந்ததும் உனது குட்டிநாய் உன் மீது தாவிப்பாய்கிறது. துள்ளி துள்ளி உன்மீது ஏறுகிறது, அடித்தா கலைப்பாய், மெதுவாக அதன் வழிக்கு விட்டு பின் மடியில் வைத்து விளையாடுவாயே. அப்படியே மனதையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வா.

**– சுவாமி சின்மயானந்தர்**



# மருத்துவ அறிக்கை

டாக்டர்

மருத்துவ முறையை
மாற்றுங்கள் டாக்டர்

"வாயைத் திற" என்பீர்கள்
வயிறு தெரியும்படி
வாய் திறப்போம்

"நாக்கை நீட்டு" என்பீர்கள்
கல்கத்தா காளியாய்
நாக்கை நீட்டுவோம்

"முதுகைத் திருப்பி
மூச்சிழு" என்பீர்கள்

அப்போதுதான்
உண்மையாய் சுவாசிப்போம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவுதான்
அஞ்சேல் என்று
அருள்வாக்குச் சொல்வீர்கள்

வாசிக்க முடியாத கையெழுத்தில்
வாயில் வராத பெயரெழுதிக்
காகிதம் கிழிப்பீர்கள்

மூன்று வேளை... என்னும்
தேசிய கீதத்தை
இரண்டே வார்த்தையில்
பாடி முடிப்பீர்கள்

போதாது டாக்டர்

எங்கள் தேவை
இது இல்லை டாக்டர்

நோயாளி பாமரன்
சொல்லிக் கொடுங்கள்

நோயாளி மாணவன்
கற்றுக் கொடுங்கள்

வாய்வழி சுவாசிக்காதே

காற்றை
வடிகட்டும் ஏற்பாடு
வாயில் இல்லையென்று
சொல்லுங்கள்
சுவாசிக்கவும்
சூத்திரம் உண்டு

எத்தனை பாமரர்
இஃதறிவார்?

சுவாசிக்கும் சுத்தக்காற்று
நுரையீரலின்
தரைதொட வேண்டும்

தரை எங்கே தொடுகிறது?
தலைதானே தொடுகிறது

சொல்லிக் கொடுங்கள்

சாராயம் என்னும்
திரவத்தீயைத் தீண்டாதே

கல்லீரல் எரிந்துவிடும்

கல்லீரல் என்பது கழுதை
பாரம் சுமக்கும்
படுத்தால் எழாது
பயமுறுத்துங்கள்

ஒருகால் வீக்கம்
உடனே கவனி
யானைக்கால் அறிகுறி

இருகால் வீக்கம்
இப்போதே கவனி
சிறுநீரகத்தில்
சிக்கல் இருக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயில் என்ன
ஆறாத புண்ணா?

மார்பகப் பரப்பில்
கரையாத கட்டியா?

ஐம்பது தொட்டதும்
பசியே இல்லையா?

சோதிக்கச் சொல்லுங்கள்

அறியாத புற்றுநோய்
ஆனா ஆவன்னா எழுதியிருக்கலாம்

நோயாளியை
துக்கத்திலிருந்து
துரத்துங்கள் டாக்டர்

நோயொன்றும் துக்கமல்ல

அந்நியக்கசடு வெளியேற
உடம்புக்குள் நிகழும்
உள்நாட்டு யுத்தம் அது
சர்க்கரை என்பது
வியாதியல்ல
குறைபாடு என்று கூறுங்கள்

செரிக்காத உணவும்
எரிக்காத சக்தியும்
சுடுகாட்டுத் தேரின்
சக்கரங்கள் என்று

சொல்லுங்கள் டாக்டர்
ஊமை ஜனங்களிவர்
உள்ளொளி அற்றவர்

பிணி வந்திறப்பினும்
முனி வந்திறந்ததாய்
முனகுவர்
சொல்லிக் கொடுங்கள்

யோகம் என்பது
வியாதி தீர்க்கும்
வித்தை என்று சொல்லுங்கள்
உயிர்த் தீயை உருட்டி உருட்டி
நெற்றிப் பொட்டில்
நிறுத்தச் சொல்லுங்கள்

உணவு முறை திருத்துங்கள்
தட்டில் மிச்சம் வைக்காதே
வயிற்றில் மிச்சம் வை
பசியோடு உட்கார்
பசியோடு எழுந்திரு

சொல்லுங்கள் டாக்டர்

அவிக்காத காய்களே
அமிர்தம் என்று சொல்லுங்கள்

பச்சை உணவுக்குப்
பாடம் நடத்துங்கள்

மருந்தை உணவாக்காதே
உணவை மருந்தாக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரைச் சிறைவிட்டு
மனிதனே வெளியே வா

கோணாத ஒருவன்
கூனன் ஆனான் ஏனாம்?

அவன்
டப்பா உணவுகளையே
உட்கொண்டதுதானாம்

ஒருவனுக்கு
விஷப்பாம்பு கடித்தும்
விஷமில்லை ஏனாம்?

அவன்
உப்பில்லா உணவுகளையே
உட்கொண்டதுதானாம்

ஆரோக்கிய மனிதத் தேவை
அரைகிராம் உப்புதானே

மனிதா

உப்பைக் கொட்டிக் கொட்டியே
உயிர் வளர்க்கிறாயே
செடி கொடியா நீ
சிந்திக்கச் சொல்லுங்கள்
உண்மை இதுதான்

மனிதனைத் தேடி
மரணம் வருவதில்லை
மரணம் தேடியே
மனிதன் போகின்றான்

டாக்டர்


எல்லா மனிதரையும்
இரு கேள்வி கேளுங்கள்:

“பொழுது
மலச்சிக்கல் இல்லாமல்
விடிகிறதா?

மனச்சிக்கல் இல்லாமல்
முடிகிறதா?’’

1989

**- வைரமுத்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரியார் சுவாமிகள் சொன்ன கதை



ஓர் ஊருக்குப் பண்டிதர் ஒருவர் சென்றிருந்தார். அவர் மெத்தப் படித்த மேதாவி. சகல சாஸ்திரங்களும் கைவரப் பெற்றவர். அவ்வூரில் பகல் வேளை கடும் புயலும் பெருமழையும் பெய்தது. ஒரு தனவந்தரது முற்றத்தில் ஒதுங்கி நின்றார். அவ்வீட்டில் ஒரு வயதான அம்மா உதவிக்கு 15 வயதுப் பணிப்பெண்.

பகல் பத்து மணிக்கு தெருவால் ஒரு பிரேதசம் பறை முழங்க மயானம் சென்று கொண்டிருந்தது. அம்மையார் உடனே பணிப்பெண்ணைக் கூப்பிட்டு பிள்ளாய்! இறந்தவர் யார்? இவர் மோட்சமா, நரகமா எங்கே போகிறார் பார்த்துவா என்றார். பெண் ஓடினாள் 15 நிமிடத்தில் திரும்ப வந்தாள். அம்மா! வட்டிக்கடை வைத்திலிங்கம் மார் அடைப்பால் மாண்டார். அவர் நரகலோகமே போகிறார் என்றாள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பதினொரு மணியாச்சு பிறிதொரு பிணம் பறையின்றி பாட்டோடு சுடுகாடு போனது. நூறு போர் உடன் போனார்கள். அம்மா விட்டபாடில்லை பிள்ளாய்! ஓடிப்போய் இந்த அம்மா பங்கஜவல்லி எங்கே போகிறாள் பார்த்து வா என்றாள். 1/2 மணி கழித்து அப்பணிப்பெண் வந்தாள். அம்மா! பங்கஜவல்லி காலையில் மரணித்தாள். நேரே சொர்க்கம் போகின்றாள் என்றாள்.

பண்டிதர் பரமசாமி வேதநூல் வித்தகராச்சே. அவருக்கு எதுவுமே புரியவில்லை. அம்மையாரைஅணுகி எப்படி அம்மா பணிப்பெண் மோட்சத்தையும் நரகத்தையும் இனம் கண்டு இயம்புகின்றாள் என்று வினாத் தொடுத்தார்.

உடனே அம்மையார், பணிப்பெண்ணை அருகில் இருத்தி இந்த வேற்றுமையை விளக்கும்படி வேண்டினார்.

பணிப்பெண் பண்டிதருக்குச் சொன்னாள்:

.255028

ஐயா!

பிணத்தைத் தொடர்ந்து நானும் செல்வேன். ஊரார் தத்தமது வீட்டுப் படலையில் கூடி நின்று பேசுவார்கள். கூர்மையாக் கேட்பேன். வட்டிக் கடையான் வைத்திலிங்கம் மாபாவி வட்டிக்கு வட்டி கடும் வட்டி வாங்கிய கயவன். எச்சில் இலையையும் காக்கைக்குக் காட்டாத கருமி, கஞ்சன் மாண்டான். மக்கள் தப்பித்துக் கொண்டார்கள் ஏழேழு நரகம் இவனுக்கு காத்திருக்கு என்று மக்கள் கூறி நகைத்தனர். முடிவு நரகம் தான் இதில் ஏது சந்தேகம்.

பங்கஜவல்லி பண்பான பாட்டி இரப்பதற்கு ஈய்ந்து உள்ளது அனைத்தும் தந்து விட்டாள். கோயிலும், குளமுமாய் தானமும் தர்மமும் செய்த சீமாட்டி தண்ணிர்ப்பந்தல், ‘ஆ’ வுரஞ்கல்லு, அனாதை விடுதிக்கு அவித்துப் போடுவாள். மடிப்பிச்சை வேண்டி மஞ்சமும் அமைத்தவள். சீமாட்டி செத்தும் சிவலோகம் சென்றடைவாள். இப்படி ஊரார் பேசினர். முடிவு நான் சொல்ல இனி என்ன உண்டு. பங்கஜவல்லி பரமனடி பணிந்தாள். பரலோகம் சென்றாள். தெய்வப்பிறவி தேவலோகத்தில் வீற்றிருப்பாள்.

இதைக் கேட்ட பண்டிதல் கூனிக் குறுகி நங்கை நல்லாளை நாவாரப் புகழ்ந்தார்.

நாம் விட்டுச் செல்லும் புகழோ இகழோ அதுவே சித்திர குப்தனின் பலன்ஸ் சீட்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போட்டி

ஒருநாள், எனக்கும் வானத்திற்கும்
போட்டி நடந்தது

நான் புன்னகையை எடுத்து வைத்தேன்
அது வைகறையை எடுத்து வைத்தது

நான் கண்ணீரை எடுத்து வைத்தேன்
அது மழையை எடுத்து வைத்தது

நான் வியர்வைத் துளிகளை எடுத்து வைத்தேன்
அது நட்சத்திரங்களை எடுத்து வைத்தது

நான் கோபத்தை எடுத்து வைத்தேன்
அது வெயிலை எடுத்து வைத்தது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் காதலை எடுத்து வைத்தேன்
அது நிலவை எடுத்து வைத்தது

நான் எண்ணங்களை எடுத்து வைத்தேன்
அது மேகங்களை எடுத்து வைத்தது

நான் எழுத்தை எடுத்து வைத்தேன்
அது மின்னலை எடுத்து வைத்தது

நான் பேச்சை எடுத்து வைத்தேன்
அது இடியை எடுத்து வைத்தது

நான் கவிதையை எடுத்து வைத்தேன்
அது வானவில்லை எடுத்து வைத்தது

நான் உறக்கத்தை எடுத்து வைத்தேன்
அது இருளை எடுத்து வைத்தது

நான் சந்தேகங்களை எடுத்து வைத்தேன்
அது கிரகணங்களை எடுத்து வைத்தது

நான் பெருமூச்சை எடுத்து வைத்தேன்
அது புயலை எடுத்து வைத்தது

இறுதியில் நான்
புதுப்புது இலட்சியங்களை
நோக்கி நடக்கும்
என் பாதங்களை எடுத்து வைத்தேன்
வானம் தோற்றது.

**- அப்துல் ரகுமான்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவஷம் (தர்பணம் - சிராத்தம்) ஆகியவற்றை பிதிர்களுக்குச் செய்கின்றோம். அதனை அவர்கள் ஏற்பதாகவும் கூறுகின்றோம். அதே வேளை மூதாதையர் மீண்டுவந்து பிறந்து விடுகின்றனர் எனவும் நம்புகின்றோம். இவை இரண்டும் பொருத்தமுடையதாகத் தெரியிவில்லையே?

மனிதர்களாகப் பிறந்த எமக்குப் போன பிறவி எது அடுத்த பிறவி எது என்பது தெரிவதில்லை. அனால் இந்தத் தொடர் சங்கிலியில் நாமும் ஒரு கண்ணி என்பதை உணர்கின்றோம் யப்பானைப் பாருங்கள் - அது ஒரு அதிக முன்னேற்றம் கண்ட நாடு. அங்கு இளைஞரும் வயதானவர்களும் முதியவர்களை வழிபடுவகிறார்கள். தம் மூதாதையரது பித்துருக்கள் அடக்கம் செய்த இடத்திற்குச் சென்று மரியாதை செய்கிறார்கள். பெரியவர்கள் மலரை வைத்து வணங்கினால் குழந்தைகள் ஒரு பொம்மையையாவது வைத்து வணங்குவார்கள். பித்துருக்களை அவர்கள் தெய்வமாகவே கருதுகின்றார்கள். இதே போல் இந்துக்களும் பிதிர்களை கவுரவிக்கின்றோம். இப்படிக் கவுரவிப்பதால் அவற்றின் ஆசிகளையும் பெறுகின்றோம் அவற்றை அலட்சியம் செய்வதால் குடும்பங்களில் சங்கடங்கள் வருவதையும் காண்கின்றோம். குழந்தைகளும் குறையுடன் பிறக்கின்றன. இவையும் பிதிர்களின் சாபங்களே.

இறந்த மூதாதையரின் பெயரில் செய்யப்படும் தானங்களை அவர்கள் மனமுவந்து ஏற்கிறார்கள். இதனை அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். நாம் செய்யும் பிதிர் தானங்கள், தர்மங்கள் அவர்களைச் சென்றடைகின்றன. அவர்களின் தரத்தை இவை உயர்த்துகின்றன. அவர்கள் மறுபிறவி எடுத்திருப்பினும் கூட இவை வீண் போவதில்லை அவர்களை இவை சென்றடைகின்றன. இதனையே இராமர் தன் தந்தைக்குச் சிரார்த்தம் செய்ததாக வரலாறு கூறுகின்றது.

- பிரேமஜி அம்மையார்

# ஆவிக்குத் தருவது ஆவியை அடையுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன் பெட்பு

தமிழன் என்றோர் இனமுண்டு;
தனியே அவற்கொரு குணமுண்டு;
அமிழ்தம் அவனுடை வழியாகும்;
அன்பே அவனுடை மொழியாகும்.

அறிவின் கடலைக் கடைந்தவனாம்;
அமிழ்தத் திருக்குறள் அடைந்தவனாம்;
பொறியின் ஆசையைக் குறைத்திடவே
பொருந்திய நூல்கள் உரைத்திடுவான்.

கவிதைச் சுவைகளை வடித்தெடுத்தான்
கம்பன் பாட்டெனப் பெயர்கொடுத்தான்;
புவியில் இன்பம் பகர்ந்தவெல்லாம்
புண்ணிய முறையில் நுகர்ந்திடுவான்.

“பத்தினி சாபம் பலித்துவிடும்“
பாரில் இம்மொழி ஒலித்திடவே
சித்திரச் சிலப்பதி காரமதைச்
செய்தவன் துறவுடை ஓரரசன்

சிந்தா மணி, மணி மேகலையும்
பத்துப் பாட்டெனும் சேகரமும்,
உந்தா விளக்கெனத் தமிழ் நாட்டின்
நாகரி கத்தினை மிகக்காட்டும்.

தேவா ரம்திரு வாசகமும்
திகழும் சேக்கி ழார்புகழும்
ஓவாப் பெருங்கதை ஆழ்வார்கள்
உரைகளும் தமிழன் வாழ்வாகும்.

தாயும் ஆனவர் சொன்னவெலாம்
தமிழன் ஞானம் இன்னதெனும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாயும் துறவுகொள் பட்டினத்தார்
பாடலும் தமிழன் பெட்பெனலாம்.

நேரெதும் நில்லா ஊக்கமுடன்
நிமிர்ந்திட அச்சம் போக்கிவிடும்
பாரதி என்னும் பெரும்புலவன்
பாடலும் தமிழன் தரும்புகழாம்.

கலைகள் யாவினும் வல்லவனாம்
கற்றவர் எவர்க்கும் நல்லனாம்
நிலைகொள் பற்பல அடையாளம்
நின்றன இன்னும் உடையோனாம்.

சிற்பம் சித்திரம் சங்கீதம்
சிறந்தவர் அவனினும் எங்கே சொல்?
வெற்பின் கருங்கால் களிமண் போல்
வேலைத் திறத்தால் ஒளிபண்ணும்.

உழவும் தொழிலும் இசைபாடும்
உண்மை; சரித்திரம் அசைபோடும்;
இழவில் அழுந்திடும் பெண்கூட
இசையோடழுவது கண்கூடு.

யாழும் குழலும் நாதசுரம்
யாவுள தண்ணுமை பேதமெலாம்
வாழும் கருவிகள் வகைபலவும்
வகுத்தது தமிழெனல் மிகையலவாம்.

கொல்லா விரதம் பொய்யாமை
கூடிய அறமே மெய்யாகும்;
எல்லாப் புகழும் இவை நல்கும்
என்றே தமிழன் புவிசொல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானம் பெரிதென உயிர்விடுவான்;
மற்றவர்க் காகத் துயர்படுவான்;
தானம் வாங்கிடக் கூசிடுவான்;
"தருவது மேல்" எனப் பேசிடுவான்

ஜாதிகள் தொழிலால் உண்டெனினும்
சமரசம் நாட்டினில் கண்டவனாம்;
நீதியும் உரிமையும் அன்னியர்க்கும்
நிறைகுறை யாமல் செய்தவனாம்

உத்தமன் காந்தியின் அருமைகளை
உணர்ந்தவன் தமிழன்; பெருமையுடன்
சத்தியப் போரில் கடனறிந்தான்;
சாந்தம் தவறா துடனிருந்தான்.

குறிப்புரை : 1 பொறியின் ஆசை- ஐம்பொறிகளின் விருப்பம். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகள். 2 நந்தா விளக்கு- அணையா விளக்கு 5; பெட்பு - ஆசை, அன்பு, பெருமை 7; நேர்- ஒப்பு 8;வெற்பு- மலை; சாந்தம் - அமைதி

**- நாமக்கல் கவிஞர்**



# குறளோவியம்

குறள் தனை உலகிற்குத் தந்த அந்த ஒப்பற்ற தமிழ்ப்புலவன் வள்ளுவன், தனித்து திண்ணையிலே இருக்கின்றான், அமைதியே உருவமாக, அடக்கமே அணிகளாக, அந்தத் தெய்வப் பெரும்புலவன் தெருவோராத் திண்ணையிலே கோதி முடிந்த கொண்டையுடன், ஏகாந்தமாக எதனையோ ஆழமாகச் சிந்தித்தபடி இருக்கின்றான்.

அவ்வழியியே வந்த தமிழாய்ந்த தமிழ்ப்புலவன், வளையாமுடி தன்னிகரில் தமிழ்ப்புலவன், தகமைசால் பேரறிஞன், வள்ளுவனாரைக் கண்டதும் கரம் கூப்பி சிரம் தாழ்த்தி 'தெய்வத் திருமகனே! இவ்வுலகு அழியும் வரை அழியாத அருந்தமிழ் குறளமுதை அவனிக்களித்த அண்ணலே' என்று அவர் பாதக் கமலத்தைத் தொட்டுவிட முற்படுகின்றார். வேண்டாம் வேண்டாம் அருகமர்ந்து அளாவுவோம் அமர்க என்றான் குறளாசான்.

'அதிகாலை இவ்வழியே ஏன் வந்தீர்'? என்றான் குறளாசான் - 'தலைக்கேறிய சந்தேகம் ஒன்றுண்டு, தங்கள் குறளமுது அனைத்தையுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே படித்துணர்ந்தேன் - இந்த 1330 அருங்குறளில் கண்டவற்றை படித்துணர, படித்தபடி வாழ்வமைக்க வாழ்நாள் போதாது ஐயனே! ‘அதற்காகவா என்னைக் காணவந்தீர் வளையா முடி என்னும் தமிழ் முடியே’! என்று முத்தான பல்வரிசை முகிழ்ந்திட புன்னகையை பூரிப்போடு உதிர்த்தான் வள்ளுவன்.

“ஆம் ஐயனே! என் வாழ்நாளில் சரிபாதி போய் விட்டது. இருப்பதோ அரைவாசி, இதில் ஒரு குறளையாவது முழுதாக என் வாழ்வில் கடைப்பிடிக்க முயலப்போகிறேன். அதனைத் தேர்ந்தெடுத்து விளக்குவது ஐயனே! தெய்வப் பெரும்புவலா! நின்பணி - எனக் கொண்டேன்” - எனக்கூறி இருக்கை விட்டெழுந்து கரம் கட்டி நின்றார் வளையாமுடி - அமர வைத்தார் வள்ளுவனார். வளையாமுடியும் கூனிக்குறுகி இருந்து விட்டார்.

‘மனம்‘ என்று ஒன்றுண்டு - அல்லவா? அதனை எத்துணை பக்குவமாக, மாசு, தூசு, மறுப்படியாமல் பளிங்கு போல் வைத்திருப்பாயோ அத்தனை உயரும் உன் வாழ்வு - தூய்மை குன்றாமல் துலங்குமானால் அம் மனத்திற்கு ஈடு உலகிலேது - வெளிப்பூச்சு பகட்டு, மினக்கு, இவை வெளி வேஷம், பூச்சுக்களும், புணக் காரங்களும் உடலை ஒரு சமயம் தூய்மை ஆக்கலாம். ஆனால் மனத்தைத் தூய்மையாக வைத்திருக்க இவை உதவாது. இத்தனை மிகப்பெரும் உண்மைதனை ஏழே சொல்லில் சொல்லி விட்டேனே - படித்திருப்பாயே” வளையாமுடி “ஆம் ஐயனே படித்துள்ளேன். “

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகல நீர பிற. (குறள் 34)

‘ஆம் அறிஞரே! எம் மதத்தவனாகிலும், எவ்வூரவனாகிலும், எந்தக் கண்டத்தைச் சேர்ந்தவனாகிலும் எந்த யுகத்தில் வாழ்ந்தாலும், அவனுக்கு இந்த நீதி மிக மிகப் பொருந்தும் - அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இவை அனைத்தும் விளையும் விளை நிலமல்லவா மனம். ஆதலால் மளித்தல் என்று தலையை வழித்து விடாதே நீட்டல் என்று தாடி நீட்டி விடாதே - என் மனதை மட்டும் மாசுபடியாது - சிந்தனையால், சொல்லால், மற்றும் செயலால் - எந்த மாசுகளையும் மனத்தில் தேக்காதே இந்தக் குறள் ஒன்றே உனக்கு போதுமானது - போய்வா வளையாமுடியே போய்வா’ என்று கூறிவிட்டு வள்ளுவரும் எழுந்து விட்டார். ‘ஐயனே! அடியேன் இறுதியாக ஒரு வேண்டுகோள், தர்மலட்சுமி அம்மாளின் மறைவிற்கு ஒரு கல்வெட்டு எழுதுகிறார்கள் அதில் தங்கள் பொன் மொழியை அச்சிட உத்தரவு தரவேண்டும்‘ - ‘ஆகட்டும் ஆகட்டும்‘ என்று குறளாசான் கூறியபடியே வாசுகி அம்மை வரவுகண்டு குடிசையுட்புகுந்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. உதயனாம் தினசரி தன்னை
உண்மையாய் விமர்சிக்கின்றேன்
ஆதலால் மன துநொந்து
ஆசிரியரே குறை கொள்ளாதீர்
சதமதோ அறு நூறைத் தந்து
சற்றே அதைப் படிக்கும் வேளை
இதயமே நோகுதென்பேன்
இதற்கான காரணத்தைச் சொல்வேன்.

02. உதயன் மேல் கோபம் கொண்ட
உளுத்தனோ நானுமல்ல
நிதம் நிதம் படிக்கும் நேயர்
நினைவதைக் கூற வந்தேன்
உதயனின் உயர்வைக் காணும்
ஊக்கத்தால் உரைக்கலுற்றேன்
நிதமதைப் படிக்கும் அன்பர்
நீள் துயர் கொள்ளலாமோ?

03. அட்டைகள் தொலைத்தோர் பேர்கள்
அடைக் கோழி விற்போர் பேர்கள்
மட்டையைக் கண்டெடுத்தால்
மதிப்பது தருவோர் பேர்கள்
பெட்டையைக் கரை சேர்க்க என்று
பெயர் தரும் புறோக்கர் பேர்கள்
முட்டைகள், நாய்கள் விற்போர்
முழுப்பக்கத்தில் கால் பக்கம் ஏற்பார்.

04. செத்தவர்கள் பெயர்கள் பட்டி
சிவலோகம் அடைந்த தேவி
உத்தமர் உறவுக்காரர்
உதவிய படங்கள் பட்டி
மெத்தையாய்க கனடா நாட்டில்
முழுமையாய் இங்கிலாந்தில்
செத்தவர் பரம்பரையைச் சேர்த்து
சிறப்பாகத் தருவீர் பக்கம் பாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. எண்பதைத் தாண்டி நின்று
எவருமே பாராது விட்டு
மூன்றாம் நாள் புழுத்துக் கண்ட
மூதாட்டிக்குக் கண்ணீர் அஞ்சல்
லண்டன் வாழ் பேரன் அஞ்சல்
லாவோஸ் வாழ் பூட்டி அஞ்சல்
என்னத்தைச் சொல்வேன் பாட்டி
எல்லாமே உதயன் அஞ்சலிகளாச்சே!

06. திருமண ஓலைக் கென்று
தருவதோ பக்கம் ஒன்று
மருமகள் பூப் பெய்திவிட்டால்
மாமனாருக்கு பக்கம் பாதி
குருக்களாய் பூணூல் ஏற்றாய்
குறைந்தது அரைக்கால் பாதி
அரும் பெரும் பல்கலைக் கழகத்தாருக்கு
அரைப் பங்கு குத்தகையு மாச்சே

07. வீடியோ விளம்பரங்கள்
விமர்சனம் பட வகைகள்
நாடியே மாணவர் கற்க
நயம் படு டியூசன் சென்ரர்
கூடியே படங்கள் பார்க்க
கொட்டகை விளம்பரங்கள்
ஓடியோ வீடியோ வுக்கு
ஒருபக்கம் ஒதுக்குகின்றீர்.

08 கல்லெடுப்பு அந்தியேட்டி
கனவான்கள் கல்வெட்டுக்கள்
வல்லவர் ஜேபி ஆக
வாழ்த்துவோர் பல பக்கங்கள்
பல் வகைத் தொலைத் தொடர்பு
பாங்கான கடைத்திறப்பு
இல்லையே இவை என்றிட்டால்
இழப்புத் தான் பண வரவு.

09. ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசு
பெற்றால்
ஆசிரியரைப் பெற்றோர் போற்றி
பெற்றோரை உற்றார் போற்றி
உற்றாரை ஊரார் போற்றி
உதயனே அனைவரையும்
சய சய போற்றி போற்றி.

10. பத்திலே எட்டுப் பக்கம்
பகிர்ந்திவை போடுவீர்கள்
மொத்தத்தில் மிஞ்சும் இரண்டு
முழுச் செய்திக்கு இடம் தான் ஏது?
நித்தமும் காலை வேளை
நிதம் நிதம் சாவோலை யாச்சு
இத்தனையும் அறிந்து நாங்கள்
என்ன தான் செய்வோம் ஈசா!

ஆதலால் கோபம் கொண்டு அடியேனைத் திட்ட வேண்டாம்
அனைத்தையும் கைவிட்டால் அடித்துத் தான் பூட்ட வேண்டும்
உதயனும் உதயனாக உருப் பெற்று மிளிர வேண்டும்
விளம்பரம் கல் வெட்டு விவாக நல் முகூர்த்தங்களை - தனி ஒரு
இணைப்பதாக Supplement தனித்து அதை இணைக்க வேண்டும்.
செய்தித் தாள் செய்தியோடு சீராக விளங்கி நிற்க
மற்றவை ஒன்று சேர்த்து மக்களைக் கவரலாமோ?

**உதயன் உயர்வுக்காக உதயன் பத்திரிகையில் 19.06.1999 அன்று "சேரலாதன்" என்ற புனை பெயரில் விகடகவி மு. திருநாவுக்கரசு வரைந்த விமர்சன மடல்**

**அன்பன் - சேரலாதன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓர் அரிசி தந்த உயர்வு

அந்த ஊரிலே அதுவே மிகப்பெரிய மாளிகை, - மெத்தைவீடு, மேல்மாடி அம்மாவுக்கு - கீழ்மாடி ஐயாவுக்கு - மெத்தைவீட்டம்மா, பரம்பரை சொத்துகட்கு அதிபதி, நெல்வயல் 150 ஏக்கர், தென்னை 200 ஏக்கர், தோட்டநிலம் பல ஏக்கர், ஆனால் என்ன? படு கஞ்சல் உலோபியில் கெட்ட மகா உலோபி. வீட்டுத்துரை மகனோ பட்டாபிராமன். பெட்டியில் பாம்பு பெரும் தவளையாச்சே - அம்மாவின் அடி பணியும் ஆசாமி.

இத்தனைக்கும் குழந்தைகள் ஏதுமில்லை - உள்ளதெல்லாம் - "கடி நாய் கவனம்" என்ற வாசலிலே தொங்கும் மகா வாக்கியத்தை மெய்ப்பிக்கும் ஒரு அல்சேசன் - யமன் அதன் வீட்டுப் பெண்

பிச்சை கேட்டு வருபவர் ஓட்ட விரட்டப்படுவர். ஓட முடியாதவரை யமன் ஓடவைப்பான். 'அம்மா' பிச்சை என்றால் 'யாரடா' அங்கே? போடா வெளியே. என்ற பொன்மொழியே அம்மா உதிர்க்கும் ஒரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் படலை பூட்டி, வாசல் கதவு மூடி, இயமனையும் அவிட்ட பின்பே மெத்தைவீட்டம்மா அன்னம் அருந்துவாள். மதியம் தின்ற வாழை இலையை இரவுக்கு அலம்பி வைப்பாள் அப்பத்தினி.

ஒரு நாள் அவ்வூருக்கு வந்திருந்த மகாதுறவி, பத்து வீட்டில் பிடி அரிசி பெற்று, அமுது செய்து ஆண்டவனார் முன் படைத்து ஒரே வேளை உணவு உண்ணும் உத்தமர் - அம்மையின் குணநலமறியாது முற்றத்தில் வந்து "தாயே ! பிடி அரிசி - தாரும்" எனக் கேட்டு விட்டார். அம்மையாருக்கு வந்தது கோபம் 'அடே மூடா! மதி உண்டா உனக்கு ஏனடா இங்கு வந்தாய் உன் உடம்பை வைத்து உழைக்க முடியாமல் பிச்சை கேட்க வந்தாய், தாடிவேறு வளர்த்து சாமிவேடம் போடுகிறாயே?" என்று விரட்டினாள் அம்மா. துறவி எதுவுமே பேசாமல் நின்றதும் மெத்தை வீட்டம்மாவுக்கு வந்தது கோபம். 'எடடா உலக்கை' என்றாள் அம்மா, பட்டா பிராமன் உலக்கையையே கொண்டு வந்து தர ஓங்கி விட்டாள், உலக்கையில் ஓர் அரிசி ஒட்டியிருந்தது. துறவியின் கமண்டலத்தில் தப்பித்தவறி அந்த அரிசி விழுந்து விட்டது. அடுத்துப் பல வீட்டில் அரிசி பெற்று அமுது செய்து அதனை அர்ப்பணித்து ஒரு வேளை உண்ட துறவி அடுத்த ஊர் பயணமானார்.

ஆவேசம் கொண்ட அம்மாவுக்கு அடுத்த நாள் இரத்த அமுக்கம் உயரவே படுக்கையானாள். நாலாம் நாள் ஆவி பிரிந்தது. கருமி மெத்தைவீட்டம்மாவை, இமய தூதர்கள் இழுத்துச் சென்றனர். கைகளைக் கட்டி, காலுக்கு விலக்கிட்டு கசை அடிபோட்டு காவலர்கள், துன்புறுத்தி வதைக்கும் வேளை அலறினாள், துடித்தாள், அவேசமாகத் துடித்தாள். ஈய்க்கும், எறும்புக்கும் கூட எதனையும் ஈயாத உலோபியை, ஈக்களும், எறும்பும் மெய்த்துக் கடிக்க, காக்கைகள் கூடிக் கொத்தி மகிழ நரக வேதனையின் நடுவில் துடியாய்த் துடித்தாள், தொலைவிலே இந்திரலோகம் தண்ணிலவு, தென்றல், தாமரைப் பொய்கை, வேணுகானம், ஆடல் பாடல், அரம்பையர் நடனம் நறுமணம் கமழ விண்ணவர் தொழுது ஏற்ற கையிலைக்கரசன் காமாட்சி சகிதம் கண்கொள்ளாக் காட்சிகாண பலர் அங்கு கூடுகின்றனர்.

மெத்தைவீட்டம்மா, புழுவாய்த்துடித்து, காவலனைக் காலில் வணங்கி 'அப்பனே இயமலோக ஏவலனே! ஒரு கணம் ஒரே கணம் என் கால் விலங்கை கழற்றி விடு ஒரு நொடியில் அம்மை அப்பனை கண்டு விட்டு வருவேன் - பின் கால்விலங்கிட்டு என்னை வதை' - எனக் கெஞ்சினாள். இரக்கமுற்ற ஏவலன் இயம மகாராசா அறியாமல் கால் விலங்கை ஒரு கணம் கழற்றினான். மெத்தைவீட்டம்மா ஓடினாள், அகிலாண்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகியின் பாதத்தில் விழுந்தாள். 'பரமதயா நிதியே! கருணைக் கடலே, அம்மையே என்னைக் காத்தருளும் என்னை இயமனின் கோரப் பிடியில் இருந்து காத்தருளும்' என கதறி அழுதாள் - சித்திரகுப்தன் அங்கு வந்து 'அம்மையே! ஆகக் கூடாதது ஆகி விட்டது இவள் செய்த ஒரே ஒரு தான தருமம் எல்லாம் உலக்கையில் கிடந்த ஓர் அரிசியை பரமனுக்குப் படைக்க பக்தனுக்கு ஈய்ந்தது தான். ஆதலால், ஒரே ஒரு வினாடி மட்டும் இவள் கயிலையைக் காண தகுதி உடையவள். இவளை இயம தூதரிடம் விட்டு விடுங்கள் என்றான்.

"ஐயகோ! அம்மா! ஆதி நாயகியே! பாவியேன் செய்த பாவவினைகளெல்லாம் சொல்லியடங்கா, ஈயாத பாவி நான், என்னைக் காத்தருளும்" என் கண்ணீரால் உமையவள் பாதத்தைக் கழுவினாள். நாரத மகாமுனியும் அங்கே வந்தார். "அம்மையே! தண்டிக்கப்பட வேண்டியவன் இயமதூதன் அவன் செய்த தவறுதான் இவளை இங்கு கொணர்ந்தது. ஆனால் பரமபதியாகிய தாங்கள் பாதக் கமலத்தை அடைந்தவரை ஆட்கொள்ள வேண்டியது அயன்நீதி" என்று பிணக்கை முடித்து வைத்தார்.

ஓரரிசி தானம் செய்தால் ஒரு வினாடி கயிலைவாசம். ஏழைகட்கு ஒரு மூடை அரிசி தானம் செய்தால் எத்தனை நாள் கயிலைவாசம் நீங்களே பெருக்கிப் பாருங்கள்.

"ஒரு நிலை மனது கொண்டு
ஒரு நிலை அறிவை ஏற்றுக்
கருமத்தின் பலன் துறந்து
காலமெல்லாம் இந்தத்
தருமத்தின் தலைவன் தன்
தழுவிய பேர்களெல்லாம்
திருவுற்றுத் தினமும் வாழ்வார்."
கீதையில் கண்ணன்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத் தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பர வும் வகை செய்தல் வேண்டும்

யாமறிந்த புலவரிலே கம்பனைபோல்
வள்ளுவர் போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்ணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை!
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒருசொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்.
வெள்ளத்தின் பெருக்கைப் போற் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்குங் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.



பாரதியார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பர்ஸில் ஒரு படம்

அந்த ரயிலில் கூட்டம் நிரம்பி வழிந்தது. டிக்கெட் பரிசோதகரின் காலில் ஏதோ இடறியது.

குனிந்து அதை எடுத்தார்.

அது ஒரு பழைய மணிபர்ஸ். ஓரமெல்லாம் ஜீரணம் ஆகி, மெருகு குலைந்திருந்தது.

பர்ஸைத் திறந்தார். சில கசங்கிய நோட்டுகளும் சில்லறைகளும் இருந்தன. அத்துடன் ஸ்ரீ கிருஷ்ணரின் படம் ஒன்றும் இருந்தது.

பர்ஸைத் தலைக்கு மேலே பிடித்துக் காட்டிய பரிசோதகர், "இது யாருடையது?" என்று குரலை உயர்த்திக் கேட்டார்.

ஒரு முதியவர் தன் பொக்கை வாயைத் திறந்து, "அது என்னுடையது" என்றார். பர்ஸின் நிலையையும், முதியவரின் வயதையும் கண்டு ஜோடிப் பொருத்தம் பார்த்தே பர்ஸைத் தந்திருக்கலாம்.

ஆனாலும் பரிசோதகர், "உம்முடையதுதான் என்பதற்கு என்ன ஆதாரம்?" என்று கேட்டார்.

"அதில் கிருஷ்ணர் படம் இருக்கும்."

"இதெல்லாம் ஒரு ஆதாரமா? யார் வேண்டுமானாலும் கிருஷ்ணர் படம் வைத்திருக்கலாமே...?"

"ஐயா" என்று நீட்டி முழக்கிய பெரியவர் ஏதோ கதை சொல்வது போல் சொல்ல ஆரம்பித்தார். வண்டி வேகம் எடுத்ததால் காற்று பெட்டியினுள் பரவ, இறுக்கம் விலகியது. வண்டியில் இருந்த அனைவரும் அவரது கதையைக் கேட்கும் 'மூடு'க்கு வந்தனர்.

பெரியவர் கூறினார்;

நான் படித்துக் கொண்டிருந்தபோது என் அப்பா எனக்கு இந்த பர்ஸைக் கொடுத்தார். அப்பா அவ்வப்போது தரும் சில்லறைகளை இதில் சேர்க்க ஆரம்பித்தேன். வீட்டில் தேடிப் பிடித்து என் அப்பாவும் அம்மாவும் ஒன்றாக இருக்கும் புகைப்படத்தைக் கண்டு பிடித்து அதில் வைத்தேன்.

நான் வாலிபனானேன். பள்ளித் தகவல்களுக்காக என்னைப் புகைப்படம் எடுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஹா! அரும்பு மீசையும் குறும்புச் சிரிப்புமாக இருந்த என்னை எனக்கே மிகவும் பிடித்தது. என் படத்தை அடிக்கடி பார்ப்பேன். அம்மா அப்பா படத்தை எடுத்துவிட்டு என் படத்தை பர்ஸில் வைத்தேன். நொடிக்கு 100 தரம் பார்த்துக் கொண்டேன்.

சில வருடங்கள் கடந்தன. எனக்குத் திருமணமாயிற்று. இப்போது மனைவியின் முகத்தை அடிக்கடி பார்க்க விரும்பினேன். பர்ஸில் மாற்றம். என் படம் இருந்த இடத்தில் என் அன்பு மனைவி. அலுவலகவேலையின் இடையில் பர்ஸைத் திறந்து புகைப்படத்தைப் பார்ப்பது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

இதெல்லாம் சில காலம்தான். எங்கள் அன்பு மயமான வாழ்க்கையின் சாட்சியாக மகன் பிறந்தான். பர்ஸில் மறுபடியும் மாற்றம்!

மனைவியின் இடத்தை மகன் ஆக்கிரமித்துக்கொண்டான். பலமுறை படத்தைப் பார்ப்பதும், 'என் மகன்' என்று மற்றவர்களுக்குக் காட்டுவதும்... எனக்கு ஒரே பெருமைதான்.

வருடங்கள் உருண்டோடின. என் மனைவி காலமானாள். என் மகனுக்குத் தன் குடும்பத்தைக் கவனிக்கவே நேரம் போதவில்லை. என்னை எப்படிக் கவனிப்பது?

என்னைத் தனிமை வாட்டியது. கூட்டத்தில் தொலைந்துவிட்ட குழந்தையாய்த் தவித்தேன்; தடுமாறினேன், அப்போதுதான் இந்தப் படத்தை ஒரு கடையில் பார்த்தேன். அன்பே உருவான கிருஷ்ணரின் கண்கள் என் நெஞ்சை வருடின.

அவனது உதட்டின் முறுவல் என் உள்ளத்தில் நேசத்தையும் பாசத்தையும் நிறைத்தது. சொன்னால் நம்புங்கள், புல்லாங்குழலிலிருந்து தன் கையை எடுத்து, என் கரம் பற்ற நீட்டினான் கிருஷ்ணன்.


என் கண்கள் அருவியாய் நீரைச் சொரிந்தன. உடனே கிருஷ்ணனின் படத்தை வாங்கி பர்ஸில் வைத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டேன். என் கவலையும் பறந்தது; தனிமையும் மறைந்தது. என்றென்றும் எவருக்கும் நிரந்தரமான துணையாக இருப்பவர் இறைவன் மட்டுமே.

பெரியவர் நிறுத்தினார்.

ஆனால் வண்டியில் இருந்த ஒவ்வொருவர் நெஞ்சிலும் கிருஷ்ணர் புல்லாங்குழல் வாசிக்கத் தொடங்கினார். பரிசோதகர் நெகிழ்ச்சியுடன் பர்ஸைப் பெரியவரிடம் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரைகுறை அறிவு ஆபத்தே

கல்வியறிவும் தூய்மையும் கொண்ட ஒரு முனிவர் காட்டில் வசித்து வந்தார். அவரிடம் கெட்டிக்கார மாணவர்கள் பலர் கல்வி பயின்று வந்தனர். முனிவர் ஒரு தந்தையைப் போல அவர்களிடம் பாசத்தைப் பொழிந்து அரிய விஷயங்களை எல்லாம் போதித்து வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி தன் மாணவர்களைப் பார்த்து,"குழந்தைகளே! எல்லா இடங்களிலும், ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் இறைவன் வாழ்கின்றான். அவனே இந்த உலகமாக ஆகியுள்ளான். நீங்களும் நானும் இந்த உலகில் காணப்படும் எல்லாப் பொருட்களும் ஒரே இறைவனின் பல்வேறு தோற்றங்கள் தாம். இதனால் எல்லா ஜீவராசிகளிடத்தும் நீங்கள் அன்பு செலுத்த வேண்டும். பிறரை இகழ்வதோ, துன்புறுத்துவதோ இறைவனுக்குச் செய்தது போலவேயாகும். மேலும் பிறருக்குத் தீங்கு செய்யும் போது, உங்களுக்கு நீங்களே தீமை செய்து கொள்ளுகிறீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். இந்த உலகில் சந்தோஷமாக இருக்க விரும்பினால் எல்லாப் பொருள்களிலும் இறைவன் வாழ்கிறான் என்று உணர வேண்டும்" என்றெல்லாம் உபதேசிப்பார் இந்த முனிவர்.

உன்னதமான இந்த அறிவுரையைக் கேட்டுப் பூரித்துப் போனார்கள் மாணவர்கள். தங்கள் வேலைகளில் மூழ்கியிருக்கும் போதுகூட அவர்களின் மனம் இந்த அறிவுரைகளையே அசைபோட்டுக்கொண்டிருந்தது.

கோவிந்தன் படிப்பில் மிகுந்த ஆர்வம் கொண்டவன். ஆசிரியர் கூறிய ஒவ்வொரு சொல்லையும் வேதவாக்காகக் கொண்டு அதன்படியே நடக்க விரும்பினான். இனிமேல் மனிதர்களை மட்டுமன்றி விலங்குகள், செடிகொடிகள், பாறைகள் எல்லாவற்றையும் கடவுளாக நினைக்கப்போவதாக உறுதி கொண்டான். "இது எப்பேர்ப்பட்ட உயர்ந்த நோக்கம்! எல்லாமே கடவுளின் தோற்றமாக இருக்கும் போது பூசல்களும் துன்பங்களும் எப்படித் தோன்றமுடியும்? இப்படி இறைவனைக் காண்பதால் நான் பெறும் ஆனந்தம் முழுமையாகத்தான் இருக்க வேண்டும்" என்று சிந்தித்து வந்தான்.

ஒருமுறை மாதாந்தரச் சாமான்கள் வாங்கி வருவதற்காக மாணவர்களை ஆசிரியர் கிராமத்திற்கு அனுப்பினார். கோவிந்தனும் சென்றான். மாணவர்கள் சாமான்களோடு பெரிய தெரு வழியாகத் திரும்பி வந்து கொண்டிருக்கும் போது தெரு முனையில் பெரிய இரைச்சல் கேட்டது. மக்கள் பயந்து போய் இங்குமங்கும் ஓடிக் கொண்டிருந்தனர். அப்போது "யானைக்கு மதம் பிடித்து விட்டது. வழியில் நிற்காதீர்கள். தெருவைவிட்டு ஓடிவிடுங்கள்" என்று உரக்க எச்சரிக்கும் குரல் கேட்டது.

மாணவர்களை நோக்கியபடி மதம் பிடித்த யானை வந்து கொண்டிருந்தது. யானையின் மீது அமர்ந்து கொண்டிருந்த யானைப் பாகன்தான் இப்படிப் பெருங்குரலில் எச்சரித்துக் கொண்டிருந்தான். கோவிந்தனைத் தவிர மற்ற மாணவர்கள் எல்லாம் ஓடி பக்கத்து வீடுகளில் புகுந்து கொண்டனர். கோவிந்தன் நடுத்தெருவில் நின்று கொண்டு, "இந்த உலகத்திலுள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பொருள்களும் இறைவனின் பல்வேறு தோற்றங்கள் என்றல்லவா நம் ஆசிரியர் கூறியிருக்கிறார்! அதனால் நானும் தெய்வம். இந்த யானையும் தெய்வம். இந்தக் கடவுள் அந்தக் கடவுளைக் கண்டு ஏன் பயப்பட வேண்டும்?" என்று எண்ணியவாறு அசையாது நின்றான்.

"பையா! தள்ளிப் போ. யானைக்கு வெறிபிடித்திருக்கிறது" என்று யானைப் பாகன் கத்தினான். கோவிந்தன் நகர்வதாக இல்லை.

யானை கோவிந்தனைப் பார்த்தது. தன் தும்பிக்கையால் அவனை வளைத்துப் பிடித்து தெருவில் மறு ஓரத்திற்குத் தூக்கி எறிந்தது. பிறகு மேற்கொண்டு சென்றது. தெரு ஓரத்தில் இரத்தக் காயங்களோடு கிடந்தான் கோவிந்தன். மற்ற மாணவர்கள் வேகமாக ஓடிச் சென்று நடந்ததை ஆசிரியரிடம் கூறி அவரை அழைத்து வந்தனர். ஆசிரியர் கோவிந்தனைத் தோள்மேல் கிடத்தி ஆசிரமத்திற்குத் தூக்கிச் சென்று, காயங்களுக்கு மருந்து போட்டுக் கட்டினார்.

நாலைந்து நாட்களில் அவன் கொஞ்சம் தேறினான். அவனைப் பார்த்து, "அன்று ஏன் ஒரு முட்டாளைப் போல நடந்து கொண்டாய்?" என்று ஆசிரியர் கேட்ட போது கோவிந்தன் ஐயா! நீங்கள் தானே எல்லாம் கடவுள் என்று சொன்னீர்கள்? அதன்படி யானையும் கடவுள் தானே? கடவுளிடம் ஏன் அஞ்ச வேண்டும்?" என்று பதில் சொன்னான்.

ஆசிரியர் பெரிதாகச் சிரித்துவிட்டு, " உன்னைப் போல ஒரு வடிகட்டின முட்டாளை நான் பார்த்ததில்லை. யானையும் கடவுள் தான். அதில் சந்தேகமில்லை. அந்த யானைப் பாகனும் கடவுள் தானே? பகான் என்னும் கடவுள் உன்னைத் தப்பி ஓடும்படி கூறவில்லையா? பாகன் என்ற கடவுளின் பேச்சை நீ ஏன் கேட்டிருக்கக் கூடாது? கேட்டிருந்தால் இந்த விபரீதம் ஏற்பட்டிருக்காது" என்றார்.

இப்போது கோவிந்தனுக்கு எல்லாப் பொருள்களிலும் இறைவனைக் காணல் என்ற தத்துவத்தின் உண்மைப் பொருள் என்ன என்பது நன்கு விளங்கிற்று. பகுத்தறிவைப் பயன்படுத்தி, பொருள்களின் உண்மை இயல்பைக் காண வேண்டுமே தவிர ஆன்மீக நாட்டமுடையவன் முட்டாளாக நடந்து கொள்ளக் கூடாது என்று அவன் உணர்ந்து கொண்டான்.

வெளித் தோற்றங்களால் கவரப்படாது, பொருள்களின் உண்மை நிலையைக் காண வேண்டும். எல்லாப் பொருள்களிலும் இறைவன் வாழ்கிறான் என்பது உண்மைதான். இதில் எந்த வேறுபாடும் இல்லை. வேறுபாடுகள் பொருள்களின் புறத்தோற்றங்களில் தான் இருக்கிறது. பொருள்களின் உண்மைப்பொருளைக் காண்பது தான் அறிவு.

**-பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தமிழ்ச் சங்கம் கலந்து விட்டது

(கவியரசு கண்ணதாசன் மறைந்தபோது எழுதியது)



ஒரு
தேவகானம்
முடிந்து விட்டது

எங்கள்
தமிழ்ச்சங்கம்
கலைந்துவிட்டது

சரஸ்வதியின் வீணையில்
ஆனந்த நரம்பொன்று
அறுந்துவிட்டது

அந்த விமானத்தில்
எங்கள் ராஜ குயிலின்
கூடுமட்டுமே
கொண்டு வரப்படுகிறது

வார்த்தைக்கு ருசித்த
வரகவியே

உன்னை
வரவேற்கக் காத்திருந்த
வர்ணமாலைகளை
உன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடலத்தின்மேல் சாத்தவா?
எழுதமுடியவில்லை
என்னால்

கண்ணீரின்
கனம் தாங்காமல்
வார்த்தைகள்
நொண்டுகின்றன

காற்றுக்கு
நன்றியில்லையா?

கவிதை வரிகளால்
காற்று மண்டலத்தையே
இனிப்பாக்கினாயே

உனது சுவசத்துக்கு
அந்தச்
சண்டாளக் காற்று ஏன்
சம்மதிக்க மறுத்தது?
அந்நிய மண் என்பதால்
மரணம் - உன் உயிரை
அடையாளம் தெரியாமல்
அள்ளிப் பருகியதா?

எத்தனை இலக்கியம்
எழுதிய விரல்
எத்தனை கவிதைகள்
முழங்கிய குரல்
எத்தனை கருத்தை
நினைத்த மனம்

ஓ
மரணத்தின் கஜானாவே
நீ
திருடிய பொக்கிஷத்தைத்
திருப்பிக் கொடுத்துவிடு

என் தாய்க் கவிஞனே
உன்னை இனி தரிசிப்பதெப்படி?
சாவின் மாளிகைக்கு
ஜன்னல்களும் கிடையாதே

நீ காதலைப் பாடினாய்
அது
இளமையின் தேசியகீதமானது

நீ சோகம் பாடினாய்
அது
ஆயிரங் கண்ணீருக்கு
ஆறுதல் ஆனது

நீ தத்துவம் பாடினாய்
வாழ்க்கை தனது
முகமூடியைக் கழற்றி
முகத்தைக் காட்டியது

அரசியல் உன்னை
பொம்மையாக நினைத்தபோதும்
நீ
உண்மையாகத் தானிருந்தாய்

உன் எழுத்து
ஒரு
கால் நூற்றாண்டுக்
கலாசாரத்தில் கலந்திருக்கிறது

மரணத்தின் பின் என்னை
விமர்சியுங்கள் என்று
வேண்டிக் கொண்டவனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று மரணத்தையன்றி
வேறொன்றையும் எமக்கு
விமர்சிக்க வலிமையில்லை

எவரேனும் இறந்தால்
உன்
இரங்கற்பாப் படித்து
இதயம் ஆறுவோம்
இன்று
இரங்கற்பாவே
இறந்து விட்டதே


உன்னைச்
சந்தித்துப் பேசும்
சர்க்கரைப் பொழுதுகளில்
உன்
கண்களின் வெளிச்சத்தைக்
காதலித்தேனே

இனி அந்த வெளிச்சம்
உன்
இமைகளைப் பிரித்தாலும்
இருக்குமா?

முப்பது வருஷத் தென்றலே
நீ நின்றுவிட்டதால்
மனசில் புழுக்கம்
விழிகளில் வியர்வை

உன்
பூத உடலில் விழும்
பூவிலுள்ள தேனெல்லாம்
கண்ணீராய் மாறிவிடும்
கவிஞனே..

**கவியரசு வைரமுத்து**



# உடல்நலமே பெரும்பேறு

கோசல நாட்டின் மன்னராக இருந்தவர் பிரசேனஜித்து. அவர் உணவுப் பிரியர். அறுசுவை உணவுகளை அளவுக்கு அதிகமாக உண்பார். அளவாக உண்பது என்பது அவரிடம் இல்லை. அளவுக்கு அதிகமாக உண்பதாலேயே உடல்நலம் கெட்டு, அதனால் சோம்பலும், உறக்கமும், மயக்கமும், ஏற்பட்டது. இதனால் அவருடைய மனநிலையும் மிகவும் பாதிக்கப்பட்டது. வாழ்க்கையே துன்பத்திற்குள்ளானது. உடம்பு அவருக்குப் பெரும்பாரமாகத் தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அதிகமாக உண்பதால் தான் உடல்நோய், மனநோய் ஏற்படுகிறது என்பது அவருக்குப் புரியவில்லை. அவர் ஒருநாள் தன் மருமகன் சுதர்சனன் என்பவரை அழைத்துக் கொண்டு, பகவர் புத்தரைத் தரிசிக்க அவர் தங்கியிருந்த விகாரைக்குச் சென்றார்.

பகவர் புத்தரைச் சந்தித்து வணங்கினார். அப்போதும் அவருக்குச் சோம்பலும், மயக்கமும், தூக்கமும் மேலிட்டன. இவற்றைத் தவிர்க்க அங்கு சிறிதுநேரம் உலாவினார். படுத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பினார். ஆனால் பகவர் புத்தர் முன்பாக அவ்வாறு செய்வது தவறு என்று கண்டு ஒரு புறமாக அமர்ந்தார். அரசருடைய நிலையைக் கண்ட புத்தர் பகவர் "அரசே! தூக்கமில்லாமல் கண் விழித்தீர்களோ?" என்று கேட்டார்.

அதற்கு "எனக்கு எப்போதும் இப்படித்தான். சாப்பிட்ட பிறகு சோம்பலும், தூக்கமும், மயக்கமுமாக இருக்கிறது. எதிலும் மனம் ஈடுபட மறுக்கிறது" என்று பதிலளித்தார்.

அரசரின் பிரச்சனை புத்தருக்குப் புரிந்து விட்டது. அவருக்கு உடல் நலம் பெறுவதற்குரிய வழியை அருள் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டார்.

உடனே மகான் புத்தர் "அரசே! அளவுக்கு மீறி உணவு உட்கொள்கிறவர்களுக்கு எப்போதும் இதுபோன்ற துன்பங்களும் நலக்குறைவுகளும் ஏற்படுகின்றன. சோம்பலுக்கு இடம்தந்து மிதமிஞ்சி உணவு கொள்கிறவர்கள். கூழ் வார்த்து வளர்க்கப்படுகிற பன்றிகளைப் போல் மயக்கம் கொண்டு, படுத்துப் புரண்டு படுத்துப் புரண்டு, தூங்கியே காலம் கழிப்பார்கள். இத்தகைய பேதமை உடையவர்கள் மறுமையிலும் வீடுபேறு அடைய மாட்டார்கள்" என உபதேசம் செய்தார்.

அரசர் சிரமப்பட்டு உறக்கத்தைக் கட்டுப்படுத்தி மனத்தை ஒருமுகப்படுத்திப் பகவரின் அருள்மொழிகளைச் செவி சாய்த்துக் கேட்டார்.

மேலும் பகவர் கூறலானார் :

"உண்ணும்போது விழிப்புடன் இருந்து மிதமாக உணவு உட்கொள்ள வேண்டும். உணவை அளவோடு சாப்பிடுகிறவர்களுக்கு எப்போதும் உடல் நலம் சீராக இருக்கும். இதை மனப்பாடம் செய்து கொள்ளுங்கள். உண்ணும்போது கவனமாக இருந்து மிதமாக உண்பவர்கள் மேனியில் நோயின்றி இருப்பர். மேலும் விரைவில் மூப்படைய மாட்டார்கள். மேலும் நீண்ட ஆயுளைப் பெறுவர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் மகான் புத்தர், அரசரின் அருகிலிருந்த தம் அறிவுரைகளைச் செவிசாய்த்துக் கேட்டுக் கொண்டிருந்த சுதர்சன குமாரனை அழைத்து, தாம் கூறியதை மனத்தில் வைத்துக்கொண்டு அரசர் உணவு உட்கொள்ளும் போதெல்லாம் அருகில் அமர்ந்து அரசர் காதில் கேட்கும்படி பாராயணம் செய்து வருமாறு அறிவுறுத்தினார். சுதர்சன குமாரனும் அவ்வாறு செய்வதாக உறுதி கூறினான்.

அன்று முதல் பின்னர் பிரசேனஜித்து உணவுண்ணும் போதெல்லாம் சுதர்சன குமாரன் அவரருகில் அமர்ந்து பகவர் அருளிய வாக்கியத்தைப் பாராயணம் செய்து வந்தான். அதைக் கேட்கும் போது அரசர் அதிகம் உண்பதை நிறுத்தி விடுவார். இவ்வாறு தினமும் நடைபெற்று வந்தது. இதனால் அரசர் அளவாக உண்டு வந்தார். நாளடைவில் தேகநலம் ஏற்பட்டது. அவர் சுறுசுறுப்பும், ஊக்கமும், மனமகிழ்ச்சியும் பெற்று, அனைவரிடமும் அன்பாக நடந்தார். தான் மாற்றம் பெற்றதை அவர் உணர்ந்தார்.

# இசை

கல்லில் எழுந்தது கலைஅருவி - உயர்
கம்பன் பொழிந்த தமிழருவி
சொல்லினில் வருவது சுவையருவி - நல்ல
சொந்தங்கள் தருவது துணையருவி!

வானம் பொழிவது மழையருவி - அது
மலைவழி வந்தால் மலையருவி
ஞானத்தில் பிறப்பது அறிவருவி - இங்கு
நாமின்று கேட்பது இசையருவி!

துன்பம் தீர்ப்பது இசையல்லவா - நெஞ்சை
சொர்க்கத்தில் வைப்பது இசையல்லவா
இன்பத்தில் மிதப்பது இசையல்லவா - என்றும்
இரக்கத்தை வளர்ப்பது இசையல்லவா!

ரசனை இல்லாதது கல்மனசு - இசை
ரசிக்கின்ற மனமே நல்மனது
அசையாப் பொருளும் உருகிவிடும் - இசையில்
ஆனந்த வெள்ளம் பெருகிவிடும்!

**-கவியரசு கண்ணதாசன்**

இனிய வாழ்க்கை மலர்ந்ததற்காக அரசர் மனம் மகிழ்ந்து ஏழை, எளியவர்களுக்குப் பெரும் பொருளைத் தானம் செய்தார். மீண்டும் பகவானிடம் சென்று வணங்கித் தான் நலம் பெற்றதைத் தெரிவித்தார்.

அப்போது பகவான் "உடல் நலமே பெரும் பேறு மனநிறைவுடன் இருப்பது பெருஞ்செல்வம் பெற்றதற்கு சமம் ஆகும். மனஉறுதியும் தன்னம்பிக்கையும் கொண்டிருப்பது நல்ல உறவினரைப் பெற்றதுபோல ஆகும். வீடுபேறு பெறுவது இவை எல்லாவற்றிலும் பேரின்பம் தருவதாகும்" என்று பகர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

255028

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐங்கரத்தண்ணலையே
அடிமனதில் கொண்டிருந்து
பண்புசேர் தமிழர் வாழ்வை
பக்குவமாய் வாழ்ந்து காட்டி
அருந்தமிழை நாளும் ஊட்டி
கண்ணென எமைக்காத்து
மண்ணிலே தமிழர் பண்பை
மறவாதே என்றுசொல்லி
வறியவர்க்கு வாரி நின்று
வாழ்வித்த வள்ளல் நீயே !
எங்கள் மனம் உன்னை எண்ணி
எப்போதும் வணங்குமையா
மைந்தன் உன் பொன்னடிக்கே
இம் மலர் சமர்ப்பணம்.

–மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Harikanan, Jaffna.